මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: PE/2024/75

2024.11.13

# பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

## வாக்கெடுப்பு நாளில் தடைசெய்யப்பட்ட செயல்கள்

பாராளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு நாள், அந்த வாக்கெடுப்பு நிலைய எல்லைக்குள் அல்லது அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குள் பிரவேசிக்கும் வாயிலில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தினுள் ஆளெவரும் பின்வரும் செயல்களில் எதனையும் புரிதலாகாது என்றும், அந்த ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தண்டனைக்கு ஆளாகலாம் என்றும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது:-

- வாக்களிக்குமாறு இரந்து கேட்டல்;
- எவரேனும் தேருநரின் வாக்கைப் பரிந்து கேட்டல்;
- குறிப்பிட்ட எவரேனும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென்று எவரேனும் நேருநரை தூண்டி வசப்படுத்த முயலுதல்;
- தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென்று எவரேனும் நேருநரை தூண்டி வசப்படுத்த முயலுதல்;
- தேர்தல் தொடர்பான, (யாதேனும் அலுவலக முறையிலான துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, புகைப்படம் அல்லது சித்திரம் அல்லது அறிவித்தல் எதனையும் தவிர்ந்த) யாதேனும் துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, புகைப்படம் அல்லது சித்திரம் அல்லது அறிவித்தல் அல்லது எவரேனும் வேட்பாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னம் எதனையும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல்;

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்